பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 06 2024 **SUNDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. அருணாச்சலப்பிரதேசத்தில் வெற்றிபெற்றுள்ள பிஜேபி மீண்டும் ஆட்சி அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2. மக்களவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கைக்கான முன்னேற்பாட்டுப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

3. வாக்கு எண்ணிக்கை தொடர்பாக, **I N D I** கூட்டணி தலைவர்களும், பிஜேபி தலைவர்களும் இன்று தேர்தல் ஆணையத்தை தனித்தனியாக சந்தித்து பேசியுள்ளனர்.

4. நாட்டின் வட மாநிலங்களில் நிலவும் வெப்பத்தின் தாக்கம் குறித்தும், ரெமல் புயல் நிவாரணப்பணிகள் குறித்தும் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

5. தைவான் ஓபன் தடகள போட்டியில், 800 மீட்டர் ஓட்டத்தில் **Ankesh Choudhary**-யும், மகளிர் நீளம் தாண்டுதலில் **Nayana James**-ம் தங்கம் வென்றுள்ளனர்.

---- *இனி விரிவான செய்திகள்* ---

<<<<<<>>>>>>

அருணாச்சலப்பிரதேசத்தில் வெற்றிபெற்றுள்ள பிஜேபி மீண்டும் ஆட்சி அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

---

மொத்தம் உள்ள 60 சட்டப்பேரவைத் தொகுதிகளில், 46 இடங்களில் பிஜேபி வெற்றிபெற்றுள்ளது.

மீண்டும் ஆட்சி அமைக்க ஏதுவாக, முதலமைச்சர் திரு **Pema Khandu** இன்று இட்டா நகரில் ஆளுநர், லெப்டினன்ட் ஜென்ரல் திரு **K T Parnaik**-கை சந்தித்து தமது ராஜினாமா கடிதத்தை அளித்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட ஆளுநர், புதிய அரசு அமைக்கும் வரை தற்போதைய அமைச்சரவை பொறுப்பில் நீடிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த சந்திப்புக்கு பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் திரு **Pema Khandu,** வெற்றிபெற்ற பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களது சட்டமன்ற கட்சித்தலைவரை தேர்ந்தெடுப்பார்கள் என்றும், பின்னர் புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

சிக்கிம் மாநிலத்தில் ஆளும் **Sikkim Krantikari Morcha** கட்சி வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைக்கிறது.

32 சட்டப்பேரவைத் தொகுதிகளை கொண்ட சிக்கிமில், **Sikkim Krantikari Morcha** 31 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

சிக்கிம் ஜனநாயக முன்னணி ஒரு இடத்தில் மட்டும் வெற்றிபெற்றுள்ளது.

முதலமைச்சர் திரு பிரேம்சிங் தமாங், தாம் போட்டியிட்ட இரண்டு தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளார்.

<<<<<<>>>>>>

அருணாச்சலப்பிரதேசத்தில் பிஜேபி-யின் வெற்றிக்கு வாக்களித்த மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், மாநிலத்தின் வளர்ச்சிக்காக தமது கட்சி மேலும் உற்சாகத்தோடு செயல்படும் என்று கூறியுள்ளார்.

கட்சியின் வெற்றிக்கு பாடுபட்ட தொண்டர்களுக்கும் தமது வாழ்த்துகளை அவர் தெரிவித்துள்ளார்.

சிக்கிம் மாநிலத்தில் மீண்டும் ஆட்சியை கைப்பற்றிய **Sikkim Krantikari Morcha** கட்சிக்கும், முதலமைச்சர் திரு பிரேம்சிங் தமாங்குக்கும், பிரதமர் தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

மாநிலத்தின் வளர்ச்சிக்காக புதிய அரசு தொடர்ந்து பாடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மக்களவைத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நாளை மறுநாள் நடைபெறவுள்ள நிலையில், அதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடவுள்ள அலுவலர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

நாடுமுழுவதும் வாக்கு எண்ணும் மையங்களில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

ஆந்திரா மற்றும் ஒடிசா சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகளும் வரும் செவ்வாய்க்கிழமை எண்ணப்படுகின்றன.

தமிழகத்தின் விளவங்கோடு உட்பட நாடுமுழுவதும் 26 சட்டப்பேரவை தொகுதிகளில் நடைபெற்ற இடைத்தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணியும் அன்றைய தினம் மேற்கொள்ளப்படுகிறது.

தேர்தல் முடிவுகளை **results.eci.gov.in** என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

**<<<<<<>>>>>>**

மக்களவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை தொடர்பாக, **I N D I** கூட்டணி தலைவர்களும், பிஜேபி தலைவர்களும் இன்று தேர்தல் ஆணையத்தை தனித்தனியாக சந்தித்து பேசியுள்ளனர்.

தேர்தல் ஆணையத்தை சந்தித்த **I N D I** கூட்டணி கட்சித்தலைவர்கள் வாக்கு எண்ணிக்கையை வெளிப்படையாக நடத்தி, முடிவுகளை அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

வாக்குகளை எண்ணும் பணிகளை தேர்தல் அதிகாரிகள் சரிவர மேற்கொள்ள வேண்டும் என்றும், அதற்கான விண்ணப்பப்படிவங்களை நிறைவு செய்ய வேண்டும் என்றும், குளறுபடிகளை தவிர்க்க வேண்டும் என்றும் நேர்மையான முறையில் வாக்குகளை எண்ண வேண்டும் என்றும் ஐ என் டி ஐ கூட்டணி தலைவர்கள் தேர்தல் ஆணையத்தை இன்று சந்தித்து மனுவை சமர்ப்பித்துள்ளனர்.

தபால் வாக்குகளை முற்றிலும் எண்ணி முடித்த பின்னரே மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளை எண்ண வேண்டும் என்று தாங்கள் தேர்தல் ஆணையத்திடம் வலியுறுத்தியிருப்பதாக அந்த கூட்டணியின் தலைவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

இதனிடையே, தேர்தல் ஆணையத்தை சந்தித்த திருமதி நிர்மலா சீதாராமன், திரு பியூஷ் கோயல், திரு ஓம் பதக் ஆகியோர் அடங்கிய பிஜேபி-யின் மூத்த தலைவர்கள் கொண்ட குழுவினர், தேர்தல் ஆணையத்தை சந்தித்து மக்களவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை குறித்து தங்களது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

**<<<<<<>>>>>>**

நாட்டின் பல பகுதிகளில் நிலவும் வெப்பத்தின் தாக்கம் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று உயரதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் வெப்பத்தாக்கம் குறித்த முன்னெச்சரிக்கைகள் குறித்து அவர் கேட்டறிந்தார்.

ராஜஸ்தான், குஜராத், மத்தியப்பிரதேசம் மாநிலங்களில் நிலவும் அதிகப்படியான வெப்பத்தின் தாக்கம் குறித்தும் பிரதமர் ஆய்வு செய்தார்.

கடுமையான வெப்பம் நிலவும் பகுதிகளில் தீ விபத்துகள் ஏற்படாமல் தடுப்பதற்குரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

வெப்ப தாக்கம் அதிகம் உள்ள மாநிலங்களில் தீயணைப்புத்துறையினர் ஆயத்த நிலையில் இருக்குமாறும் அவர் தெரிவித்தார்

தீ விபத்து குறித்த ஆய்வு, மருத்துவமனைகளில் மின்சார பாதுகாப்பு குறித்த ஆய்வு மற்றும் பொது இடங்களில் மின்சாரம் மற்றும் தீ விபத்தை தடுப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்ய வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.

வனப்பகுதிகளில் தீ விபத்து ஏற்பட்டு, பெருமளவில் மரங்கள் மற்றும் தாவரங்கள், மற்றும் விலங்குகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் வனத்துறையினர் ஆய்வுமேற்கொள்ள வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

**Vanagni** சேவை இணையதளத்தை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி, வனப்பகுதிகளில் தீயினால் ஏற்படும் சேதத்தை கட்டுப்படுத்துவற்கான நடவடிக்கைகள் குறித்தும் பிரதமர் ஆய்வு செய்தார்.

முன்னதாக, ரெமல் புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து பிரதமர் ஆய்வு மேற்கொண்டார்.

அதிக அளவில் உயிரிழப்பு மற்றும் பொருட்சேதம் ஏற்பட்ட மிசோரம், அஸ்ஸாம், மணிப்பூர், மேகாலயா, திரிபுரா ஆகிய மாநிலங்களின் தற்போதைய நிலைமை குறித்தும், அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணம் மற்றும் சீரமைப்புப்பணிகள் குறித்தும் பிரதமர் கேட்டறிந்தார்.

பல பகுதிகளில் புயலைத்தொடர்ந்து ஏற்பட்ட கனமழை காரணமாக நேரிட்ட நிலச்சரிவுகள் மற்றும் இந்த பாதிப்பிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

உள்துறை அமைச்சகம் தொடர்ந்து நிலைமையை கண்காணித்து தேவையான உதவிகள் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் அறிவுறுத்தினார்.

பிரதமரின் முதன்மைச்செயலர், அமைச்சரவைச்செயலர், உள்துறை செயலர், புவி அறிவியல் துறை அமைச்சக அதிகாரிகள், தேசிய பேரிடர் மீட்புப்படை தலைமை இயக்குனர், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் அதிகாரிகள் மற்றும் பல்வேறு அமைச்சகங்களின் உயரதிகாரிகளும் இந்த ஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

**<<<<<<>>>>>>**

நாட்டின் வடமேற்கு மற்றும் தில்லியில் நிலவி வந்த வெப்ப அலை வரும் நாட்களில் படிப்படியாக குறையக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடமேற்கு மற்றும் மத்தியப்பகுதிகளிலும், ஒடிஷாவிலும் ஆங்காங்கே ஒரு சில இடங்களில் அதிக வெப்பநிலை இன்று பதிவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில் எமது செய்திப்பிரிவுக்கு பேட்டியளித்த இந்திய வானிலை ஆய்வு மையத்தின் விஞ்ஞானி திரு ஆர் கே ஜெனமணி, தில்லியிலும், வடமேற்கு இந்தியாவிலும் படிப்படியாக வெப்பத்தின் தாக்கம் குறையும் என்று கூறினார்.

தென்மேற்கு பருவமழை காரணமாக மேலும் வெப்பநிலை குறைய வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்மாதம் நான்காம் தேதி முதல், ஆறாம் தேதிவரை தில்லியிலும், வடமேற்கு பகுதியிலும் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

ஜெர்மனியின் தென் பகுதியில் ஏற்பட்ட கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக, 600-க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அந்நாட்டில் உள்ள பல ஆறுகளில் கனமழை காரணமாக, வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நீர்மட்டமும் உயர்ந்துள்ளது.

இந்த நூற்றாண்டில் ஏற்பட்ட பெரிய மழை வெள்ளம் இது என்று அங்குள்ள ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஜெர்மனியில் பவாரியா மாகாணத்தில் உள்ள பத்து மாவட்டங்கள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள 670-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

மெக்கேன்புரோன் நகரில் உள்ள ஆயிரத்து 300-க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக ஜெர்மன் அரசின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

தைவான் ஓபன் தடகள போட்டியின் 800 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் **Ankesh Choudhary** தங்கப்பதக்கத்தையும், சோம்நாத் சௌகான் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

மகளிர் நீளம் தாண்டுதலில், 6 புள்ளி நான்கு மூன்று மீட்டர் தூரம் தாண்டி இந்தியாவின் **Nayana James** தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------

பாரிஸ் ஒலிம்பிக் குத்துச்சண்டை போட்டியில் பங்கேற்க இந்தியாவின் அமித் பங்கல் தகுதி பெற்றுள்ளார்.

தாய்லாந்தின் பாங்காக்கில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் குத்துச்சண்டை தகுதி சுற்றுப்போட்டியின் ஆடவர் 51 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், சீனாவின் **Liu Chuang** –ஐ வென்றார்.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்குபெற ஏற்கனவே தகுதி பெற்றுள்ள இந்திய குத்துச்சண்டை வீரர்கள் **Nishant Dev, Nikhat Zareen, Preeti Pawar, Lovlina Borgohain** ஆகியோரைத் தொடர்ந்து, அமித் பங்கலும் தகுதி பெற்றுள்ளார்.

----

உலகக்கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில், வெஸ்ட் இண்டீஸ் அணி - பப்புவா நியூ கினியா அணியை எதிர்கொள்கிறது.

கயானாவில் இப்போட்டி இந்திய நேரப்படி, இன்றிரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

<<<<<<END>>>>>>